அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)

## 72 - தமிழ்

### புள்ளியிடும் திட்டம்





இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளப்படும் கருத்துக்களுக்கேற்ப இதில் உள்ள சில விடயங்கள் மாற்றப்படலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)
# 72 - தமிழ்
# புள்ளி வழங்கும் திட்டம்

## பத்திரம் I

**பகுதி I**

கட்டாய வினாக்கள்

| | | |
|---|---|---|
| வினா 01 | | 24 புள்ளிகள் |
| வினா 02 | | 16 புள்ளிகள் |

**பகுதி II**

| | | |
|---|---|---|
| எவையேனும் மூன்று வினாக்கள் | 20 × 3 | 60 புள்ளிகள் |
| | | 100 புள்ளிகள் |

## பத்திரம் II

**பகுதி I**

கட்டாய வினாக்கள்

| | | |
|---|---|---|
| வினா 01 | | 20 புள்ளிகள் |
| வினா 02 | | 25 புள்ளிகள் |
| வினா 03 | | 25 புள்ளிகள் |

**பகுதி II**

| | | |
|---|---|---|
| எவையேனும் இரண்டு வினாக்கள் | 15 × 2 | 30 புள்ளிகள் |
| | மொத்தம் | 100 புள்ளிகள் |

**இறுதிப் புள்ளி கணித்தல்**

| | |
|---|---|
| பத்திரம் I | 100 புள்ளிகள் |
| பத்திரம் II | 100 புள்ளிகள் |
| மொத்தம் | 200 புள்ளிகள் |

இறுதிப் புள்ளி $\left(\frac{100 + 100}{2}\right)$ = 100 புள்ளிகள்

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)
# தமிழ் I
# புள்ளி வழங்கும் திட்டம்

இவ்வினாத்தாளிற் கொடுக்கப்பட்டுள்ள எட்டு வினாக்களுள், முதலாம் பகுதியிலுள்ள முதலாம், இரண்டாம் வினாக்களுக்கும், இரண்டாம் பகுதியிலுள்ள ஆறு வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக ஐந்து வினாக்களுக்குப் பரீட்சார்த்திகள் விடை எழுத வேண்டும்.

## பகுதி I

01. (அ) i. 04 புள்ளிகள் ii. 04 புள்ளிகள் iii. 04 புள்ளிகள்
(ஆ) i. 04 புள்ளிகள் ii. 04 புள்ளிகள் iii. 04 புள்ளிகள்
($12 + 12 = 24$ **புள்ளிகள்**)

02. (அ) அல்லது (ஆ)
(i) 04 புள்ளிகள் (ii) 04 புள்ளிகள் (iii) 04 புள்ளிகள்
(iv) 04 புள்ளிகள்
($04 \times 04 = 16$ **புள்ளிகள்**)

## பகுதி II

03. அ. 04 புள்ளிகள் ஆ. 04 புள்ளிகள் இ. 08 புள்ளிகள்
ஈ. 04 புள்ளிகள்
($04 + 04 + 08 + 04 = 20$ **புள்ளிகள்**)

04. அ. 05 புள்ளிகள் ஆ. 05 புள்ளிகள் இ. 05 புள்ளிகள்
ஈ. 05 புள்ளிகள்
($05 \times 04 = 20$ **புள்ளிகள்**)

05. அ. 05 புள்ளிகள் ஆ. 05 புள்ளிகள் இ. 05 புள்ளிகள்
ஈ. 05 புள்ளிகள்
($05 \times 04 = 20$ **புள்ளிகள்**)

06. அ. 05 புள்ளிகள் ஆ. 05 புள்ளிகள் இ. 05 புள்ளிகள்
ஈ. 05 புள்ளிகள்
($05 \times 04 = 20$ **புள்ளிகள்**)

07. அ. 07 புள்ளிகள் ஆ. 07 புள்ளிகள் இ. 06 புள்ளிகள்
($07 + 07 + 06 = 20$ **புள்ளிகள்**)

08. அ.
ஆ.
இ.
ஈ.
உ.

} பரீட்சார்த்திகளின் இரண்டு தெரிவுகளுக்கு தலா 10 புள்ளிகள் வீதம் வழங்குக.

($10 \times 2 = 20$ **புள்ளிகள்**)

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ............................................................ ✓ △ 4/5
............................................................
............................................................

(ii) ............................................................ ✓ △ 3/5
............................................................
............................................................

(iii) ............................................................ ✓ △ 3/5
............................................................
............................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

ooo

## பகுதி I

1. மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) கன்றுதன் பயமுலை மாந்த முன்றிற்
றினைபிடி யுண்ணும் பெருங்கல் நாட
கெட்டிடத் துவந்த உதவி கட்டில்
வீறு பெற்று மறந்த மன்னன் போல,
நன்றி மறந்தமையா யாயின், மென்சீரக்
கலிமயிற் கலாவத் தன்னவிவள்
ஒலிமென் கூந்த லுரியவால் நினக்கே.

(i) இச்செய்யுளில் யாரை நோக்கி யாரால் எவ்விடயம் வலியுறுத்தப்படுகின்றது?
(ii) இச்செய்யுளின் மூலம் விளங்கும் சங்ககால அகத்திணை இலக்கிய மரபினை எடுத்துக்காட்டுக.
(iii) இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள உவமைகளை எடுத்துக்காட்டி விளக்குக.

**அ)**

(I) யாரை நோக்கி - தலைவனை நோக்கி
யாரால் - தோழியால்
விடயம் - தலைவியை விரைந்து மணம்செய்துகொள்ளுமாறு தலைவனை வலியுறுத்துதல்.

**(04 புள்ளிகள்)**

(II)

- பெயர் சுட்டாப் பண்பு
- பாத்திரக் கூற்று (தோழி)
- முதல், கரு, உரிப் பயன்பாடு
  - முதல் - குறிஞ்சி (நிலம்)
  - கரு - மயில், தினை, யானை
  - உரி - புணர்தல் ஒழுக்கம்
- குறிப்பால் உணர்த்துதல்
- அகவல் / ஆசிரியம்

**(04 புள்ளிகள்)**

(III)

- தலைவியின் கூந்தலின் அழகு நலன்
  "கலிமயிற் கலாவத் தன்னவிவள் ஒலிமென் கூந்தல்"
  உவமானம் : மயிலின்தோகை
  உவமேயம் : தலைவியின் கூந்தல்
  பொதுத்தன்மை : மென்மை / அழகு / தழைத்திருத்தல்

- தலைவன் நன்றி மறத்தலாகாது என்பதை வலியுறுத்தல்

"கெட்டிடத் துவந்த உதவி கட்டில்
வீறு பெற்று மறந்த மன்னன் போல
நன்றி மறந்து"

உவமானம் : பலமிழந்த காலத்தில் பெற்று மகிழ்ந்த உதவியை அரசுக் கட்டில் ஏறிய பின் மறந்த மன்னன்

உவமேயம் : தலைவியின் அழகு நலன்களை அனுபவித்துவிட்டு, அதனை மறந்து நடக்க முற்படும் தலைவன்

**(04 புள்ளிகள்)**

(ஆ) நம்பியும்என் நாயகனை ஒக்கின்றான் அயல்நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான் தவவேடம் தலைக்கொண்டான்
துன்பம்ஒரு முடிவில்லை திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பென்றான்

(i) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.
(ii) நம்பி, நாயகன், அயல்நின்றான் என இங்கே குறிப்பிடப்படுவோர் யாவர்?
(iii) இராமன் மீது குகன் கொண்ட மதிப்பு எவ்வாறு புலப்படுத்தப்படுகின்றது?

**ஆ)**

(I) கங்கையின் எதிர்க்கரையில் வந்த பரதனைக் கண்டு சந்தேகித்து நின்ற குகன், பரதனின் தவ வேடத்தைக் கண்டு மனம்மாறிக் கூறிய சந்தர்ப்பம்.

**(04 புள்ளிகள்)**

(II) நம்பி - பரதன்
நாயகன் - இராமன்
அயல்நின்றான் - சத்துருக்கன்

**(04 புள்ளிகள்)**

(III)

- "என் நாயகன்" என்றும் "எம் பெருமான்" என்றும் இராமனைக் குறிப்பிடுதல்

என் தலைவன் பிழையா ஒழுக்கம் உடையவன் அவனது குணம் அவன் தம்பியருக்கும் வருவது இயல்புதானே எனக் கூறுவதன்மூலம் குகன் இராமன்மீது கொண்ட மதிப்புப் புலப்படுகிறது.

**(04 புள்ளிகள்)**

**[12 + 12 = 24 புள்ளிகள்]**

**2.** (அ) பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) **வீசாதீர்**

ஏதோ அவதியிலே ஏகுகிறீர்,
ஏனப்பா,
நீர்தாம் உலகு நிலைமாறிப்
பாதாளத்
தாழ விழாமல் அதன் வாழ்வைக் காப்பவரோ?
வாழி, என் தாழ்மை வணக்கங்கள்!

ஆள்சுருளும்
வெய்யிலிலே,
நீர்போகும் வீதிநடைப் பாதையிலே
உய்யும் வகைதெரியா ஓர் மனிதன்,
கைஇல்லான்,
தூங்குகிறான் போலக் கிடக்கின்றான்.
துன்புறுத்தி
வீங்கும் பசியால் விழுந்தானோ!
ஆங்கயலிற்
கொத்தவரும் காகத்தைப் பாரும்
குறை உயிரோ
செத்த உடலோ - தெளிவில்லை.

சற்றெனினும்
நில்லாது, நெஞ்சில் நெகிழ்வேதும் காணாது
சில்லறையில் ஒன்றைச் செருக்கோடு
செல்லுங்கால்
வீசி விடுதல் விரும்பினீர்;
வேண்டாம், ஓய்,
கூசும் அவமதிக்கும் கொள்கையேன்?
ஆசைமிக
ஆதலினால், காசு கணீரென்றிட அதிரும்
காதுடையான்;
அன்னோன் கடுந்தூக்கம்
பாதியிலே
கெட்டுவிடக் கூடும்,
கெடுக்காதீர், பாவம், இம்
மட்டும் புவியை மறந்திருந்தான்.

கிட்டப்போய்
மெல்லக் குனிந்து இடுக
இல்லையெனில் உம்பாட்டில்
செல்க,
இதுவே சிறப்பு.

(i) இக்கவிதை யாரை விளித்துப் பேசுகின்றது? அவரைப்பற்றிக் கவிஞர் தீட்டும் சித்திரம் எத்தகையது?

(ii) பிச்சைக்காரன் பற்றி கவிஞர் விபரிக்குமாற்றை விளக்குக.

(iii) "இம்மட்டும் புவியை மறந்திருந்தான்" - இத்தொடர் இக்கவிதையில் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.

(iv) இக்கவிதையில் நீர் காணும் மையப்பொருளைத் தெளிவுபடுத்துக.

**(அ)**

(I)

- ஒரு வழிப்போக்கரை / பாதசாரியை விளித்துப் பேசுகிறது.

  அவரைப்பற்றிய சித்திரம்

- ஏதோ அவதியில் அவசரமாகச் செல்பவர்.
- இந்த உலகம் நிலைமாறிப் பாதாளத்தில் விழுந்துவிடாமல் காப்பவர் போன்ற பாவனை கொண்டவர்.
- நின்று நிதானியாமல், போகும் வேகத்தில் செருக்கோடு ஒரு சில்லறையை பிச்சைக்காரனுக்கு வீசிவிடக்கூடியவர்.

**(04 புள்ளிகள்)**

(II)

- உய்யும் வகை தெரியாதவன்.
- கை இல்லாதவன்.
- ஆள்சுருளும் வெயிலில் தூங்குபவன்போலக் கிடப்பவன் / பசியால் மயங்கியும் விழுந்திருக்கலாம்.
- காகம் கொத்தவருமளவு குறை உயிரோ செத்த உடலோ எனும்படி கிடப்பவன்.

**(04 புள்ளிகள்)**

(III)

- பிச்சைக்காரனுக்கு இப்புவி வாழ்க்கை துன்பமயமானது.
- தன்னை மறந்த தூக்கம்தான் அவனுக்குத் துன்பத்திலிருந்து விடுதலை அளிக்கிறது.
- காசை வீசும் ஓசை அவன் தூக்கத்தைக் கலைத்து, நிம்மதியைக் கெடுக்கும்.

**(04 புள்ளிகள்)**

(IV)

- மனிதாபிமானம், ஏழைகள்மீது இரங்குதல், கருணை காட்டத் தூண்டுதல்.
- அலட்சியத்தோடு இரண்டொரு சில்லறையை வீசிவிடுதல் தர்மமல்ல.
- “கிட்டப்போய் மெல்லக் குனிந்து இடுக” என்பதன்மூலம் பிச்சைக்காரனுக்கு

ன்றது.

இக்கவிதை பிச்சைக்காரனுக்கு உதவுவதை மட்டுமன்றி, எல்லா ஏழைகளுக்கும் உதவ வேண்டும் என்பதையும் குறித்து நிற்கின்றது.

**(04 புள்ளிகள்)**

(ஆ) பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

(ஆ) முதற் காரியமாகப் பத்மா வீட்டு முற்றத்தைக் கூட்டி, சாணகத் தண்ணீர் தெளித்து முடிக்கிறாள். வருடப்பிறப்பன்று விடியும் முன்னரே, அன்றைய வழமையான கடமைகளைச் செய்து முடிக்கும் வேட்கை. வருடப்பிறப்பன்று எல்லாக் காரியங்களையும் விக்கினமின்றி உரிய முறைப்படி நிறைவேற்றிவிட்டால், வருடம் முழுவதும் அவ்வாறே அமையுமென்னும் நம்பிக்கையில் ஊறித்திளைத்த மனம். வருடப்பிறப்பன்று பழங்கறிகளுக்கு மதிப்பில்லை. கறிச்சட்டிகளை அடுக்களைக்கு வெளியே, இடப்பக்கமாகவுள்ள செவ்விளநீர்க் கன்றடியில் பரப்பிவைத்து, சாம்பல் தோய்த்தெடுக்கப்படும் 'பொச்சு' மட்டையாற் தேய்த்துக் கழுவத் தொடங்குகிறாள். திண்ணையிலே குந்தியிருந்து, சிந்தனையிலாழ்ந்திருக்கும் தந்தையை அவள் கண்கள் கவனிக்கின்றன. மரவள்ளிக் கிழங்கு காய்ச்சிய சட்டியில் அடிப்பிடித்திருந்த பாகத்தைப் பொச்சு மட்டையால் நன்றாகச் சுரண்டிக் கொண்டே பேச்சுக்கொடுக்கின்றாள்.

"என்ன அப்பு... இண்டைக்கு காலமைக் கோச்சியிலை மூத்தண்ணர் வருவாரல்லே?"

"ஓம் புள்ள, சுப்பிரமணியம் வராமல் வருஷம் பிறக்குமே? என்னதான் இருந்தாலும் அவன் வருஷத்துக்கு வராமல் இருப்பானே?"

'எப்பிடியும் அவன் வருவான். காதுப்பிடியிலை கமலா கூட்டியந்திடுவாள். கோச்சி இன்னும் நாவற்குழியைத் தாண்டியிருக்காது. இப்ப நடக்கத் துவங்கினாலும், நேரத்தோடை ஸ்ரேசனுக்குப் போயிடலாம். ஆனா, அவனுக்கு உதொண்டும் புடிக்கிறேல்லை. "நான் எங்கடை வீட்டுக்கு வாறதுக்கு ஆரும் வந்து வழிகாட்டத் தேவையில்லை" எண்டு எத்தினை கோசு கோவிச்சது எனக்கல்லோ தெரியும்...?

"புள்ளை. தேத்தண்ணிக்கு உலை வைக்கல்லையே?"

"வைச்சிட்டன்"

"கொக்கா பரிமளம் இன்னும் எழும்பல்லையே...? உங்கடை அத்தாரும் வலுநேரஞ் செண்டுதான் வந்தவர். சரியாச் சாப்பிட்டிருக்கவும் மாட்டார்."

முகத்தாரின் இன்னொரு மகளான பரிமளத்தின் கணவனும் கொழும்பிலேதான் வேலை பார்க்கின்றான். பரிமளம் தைப்பொங்கலுக்குத் தந்தையின் வீட்டிற்கு வந்தவள், திரும்பிப் போகவில்லை. கணவன் சதாசிவம் நேற்றிரவு யாழ்தேவியிலேதான் திரும்பியிருக்கிறான்.

'பாவம் அதுகளுக்கு ஆண்டவன் ஒண்டும் குறை வைக்கேல்லை. இதுக்கிடையிலை முப்பதினாயிரம் கொட்டி புதுமோடியிலை ஒரு வீடும் கட்டிப்போட்டுதுகள். கதைச் சாங்கத்திலை வைகாசி நாளுக்குத்தான் குடியேறுவினம் போலை கிடக்குது. பேந்தென்ன நெடுகிலும் குடியிருக்கப் போகினமோ? வாடகைக்குத்தான் விடுவினம். காரும் ஒண்டு வாங்கியிருக்கினமாம். அதை இன்னும் ஒரு நாளும் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரல்லை. அதுகளின்ரை அன்புக்கும் அந்நியோன்யத்துக்கும் ஒரு குழந்தையைத்தான் ஆண்டவன் குடுக்கேல்லை. சாதகத்திலை பின்னடிச் சந்ததி விருத்தி எண்டுதான் இருக்கு. ஏழு வருஷத்துக்குப் புறகுதான் சதாசிவமும் தலைச்சனாப் பிறந்தவனாம். கொழும்பிலை பேர்போன டாக்குத்தரிட்டை எல்லாம் காட்டினவை. அதுகளுக்கு ஒரு குறையுமில்லை எண்டுதான் சொன்னவையாம்...'

"கோப்பியை ஆர்றதுக்கிடையிலை குடியுங்கோ அப்பு" என்று பத்மா கோப்பி கிளாஸை நீட்டுகிறாள்.

(i) வருடப்பிறப்புப் பற்றிய கிராமிய நம்பிக்கையையும், நடைமுறைகளையும் ஆசிரியர் சித்திரித்துக்காட்டுமாற்றை விளக்குக.

(ii) முகத்தாரின் மூத்தமகனை ஆசிரியர் எவ்வாறு அறிமுகப்படுத்துகின்றார்? அதன்மூலம் வெளிப்படுத்தப்படும் அவனது குண இயல்பு யாது?

(iii) முகத்தாரின் எண்ண ஓட்டத்திலே அவரது மகள் பரிமளத்தின் குடும்பவாழ்வு பற்றிய தகவல்களை ஆசிரியர் வெளிப்படுத்துமாற்றை விளக்குக.

(iv) யாழ்ப்பாணப் பேச்சுவழக்கைக் கையாள்வதில் ஆசிரியருக்குள்ள திறமையை மதிப்பிடுக.

**ஆ)**

(I)

- பத்மாவின் நடவடிக்கைகள்மூலம் வருடப்பிறப்புப்பற்றிய கிராமிய நம்பிக்கையையும் நடைமுறைகளையும் ஆசிரியர் சித்திரிக்கிறார்.
- வருடப்பிறப்பன்று எல்லாக் காரியங்களையும் விக்கினமின்றி உரிய முறைப்படி நிறைவேற்றிவிட்டால் வருடம் முழுவதும் அவ்வாறே அமையும் என்னும் நம்பிக்கையில் ஊறித்திளைத்த மனம்.
- வீட்டு முற்றத்தைக் கூட்டி சாணகத்தண்ணீர் தெளித்தல்.
- சட்டி, பானைகளைச் சாம்பல் தோய்த்த பொச்சுமட்டையால் தேய்த்துக் கழுவுதல்.
- விடியும் முன்னரே அன்றைய வழமையான கடமைகளைச் செய்து முடித்தல்.
- எல்லா வகை உணவுகளையும் புதிதாகச் செய்து சாப்பிடுதல்.

**(04 புள்ளிகள்)**

(II)

- பத்மாவுக்கும் முகத்தாருக்கும் இடையே நடக்கும் உரையாடல் மூலமும் முகத்தாரின் நினைவோட்டம் மூலமும் முகத்தாரின் மூத்த மகனை ஆசிரியர் அறிமுகப்படுத்துகிறார்.
- முகத்தாரின் நினைவோட்டத்தின் மூலமாக வெளிப்படுத்தப்படும் அவனது குண இயல்புகள் வருமாறு:

  - ஒவ்வொரு வருடப்பிறப்புக்கும் அவன் கொழும்பில் இருந்து ஊருக்கு வருபவன்.
  - ஸ்ரேசனுக்குப் போய் யாரும் தன்னைக் கூட்டி வருவதை அவன் விரும்புவதில்லை.

  ‘‘எங்கட வீட்ட வருகிறதற்கு ஆரும் வந்து வழிகாட்டத் தேவையில்லை” என்று ஏசுபவன்.

**(04 புள்ளிகள்)**

(III)

- முகத்தாரின் எண்ணவோட்டத்தின்மூலம் அவரது மகள் பரிமளத்தின் குடும்ப வாழ்வு ஆசிரியரால் வெளிப்படுத்தப்படுகின்றது.
  - பரிமளம் கணவனுடன் கொழும்பில் வசதியாக வாழ்கிறாள்.
  - அவளும் கணவனும் புதுமோடியில் வீடும் கட்டியுள்ளனர், விரைவில் குடியேறப்போகின்றனர்.
  - அதில் தொடர்ந்து வசிக்கமாட்டார்கள், வாடகைக்குத்தான் கொடுப்பார்கள்.
  - இன்னும் குழந்தைப்பேறின்மை.
  - சாதகத்தின்படி பிந்தித்தான் அவர்களுக்குச் சந்ததி கிடைக்கும்.

**(04 புள்ளிகள்)**

(IV)

- ஆசிரியர் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கை மிகத்திறமையாகக் கையாண்டுள்ளார்.

  - இயல்பான பாத்திர உரையாடல்.

  "என்ன அப்பு.. இண்டைக்கு காலமை கோச்சியிலை மூத்தண்ணர் வருவாரல்லே"

  "ஓம் புள்ள சுப்பிரமணியம் வராமல் வருஷம் பிறக்குமே"

  - யாழ்ப்பாண வழக்குச் சொற்களின் பொருத்தமான பயன்பாடு

  சாணகத் தண்ணீர், அடுக்களை, பொச்சுமட்டை, அப்பு, காலமை, கோசு, புள்ளை கொக்கா, தலைச்சன்

  - யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழுக்கே உரிய இலக்கணக் கூறுகளின் பயன்பாடு

**(04 புள்ளிகள்)**

**[04 × 04 = 16 புள்ளிகள்]**

## பகுதி II

**3. திருக்குறள் வலியறிதல்** என்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) வலியின் பகுதியும், அதனை அறிந்து மேற்கொள்வார் அடையும் பயனும்

(ஆ) தன் வலியறியார் அடையும் இழுக்கு

(இ) பொருள் வலியறிதலின் முக்கியத்துவம்

(ஈ) கையாளப்பட்டுள்ள அணிகளின் சிறப்பு (20 புள்ளிகள்)

**அ)**

வலியின் பகுதிகள்

- செய்யக் கருதும் செயலின் வலிமை, தன்னுடைய வலிமை, பகைவரது வலிமை, தனக்கும் பகைவருக்கும் துணையாக வருவோரது வலிமை (குறள் :1)

அதனை அறிந்து மேற்கொள்வார் அடையும் பயன்

- தம்மால் செய்யக்கூடிய செயலையும் அதற்காக அறிய வேண்டியதையும் தெளிவாக அறிந்துகொண்டு, எப்பொழுதும் தம் கருத்தைச் செயலின்மீதே வைத்து பகைவர்மேல் செல்லும் அரசனுக்கு முடியாதது ஒன்றும் இல்லை (குறள் :2)

**(04 புள்ளிகள்)**

**ஆ)**

- தம்மிடமுள்ள வலிமையை அறியாதவராய், மனவெழுச்சியினால் தூண்டப்பட்டு, ஒரு செயலைத் தொடங்குவோர் முடிக்கும் ஆற்றலின்மையால் இடையில் அழிந்து போவர் (குறள்:3)
- பிற அரசர்களோடு ஒத்து நடக்காமல், தன் வலிமையின் அளவை அறியாமல், தன்னை மிகுந்த ஆற்றலுடையவன் என எண்ணிய அரசன் விரைவில் அழிந்துவிடுவான் (குறள்:4)

**(04 புள்ளிகள்)**

**இ)**

- தன்னிடமுள்ள பொருளின் அளவை அறிந்து, அதற்கேற்பப் பிறருக்குக் கொடுத்து உதவும் செயலானது பொருளைப் போற்றிக் காத்து பிறருக்குக் கொடுத்து வாழும் முறைமையாகும் (குறள்:7)
- அரசருக்குப் பொருள் வரும் வழியின் (வருவாய்) அளவு சிறிதாக இருந்தாலும், அப்பொருள் போகும் வழி (செலவு வருவாயைக் காட்டிலும்) அதிகப்படாதபோது அழிவு
- தன்னிடமுள்ள பொருளின் அளவை அறிந்து வாழாதவனுடைய வாழ்க்கை பல வளங்களும் இருப்பதுபோலத் தோன்றி ஒன்றுமே இல்லாமல் மறைந்து அழிந்துவிடும். (குறள்:9)
- தனக்குள்ள பொருளின் அளவை ஆராய்ந்து பார்க்காது பொதுநலத்திற்கு அளிக்கும் கொடையால், ஒருவனுடைய செல்வத்தின் அளவு விரைவில் அழிந்து போகும். (குறள்:10)

**(08 புள்ளிகள்)**

**ஈ)**

பிறிது மொழிதல் அணி / ஒட்டணி / நுவலா நுவற்சி அணி

- மயிலிறகு பாரம் குறைந்ததாக இருந்தாலும் அதனை அளவுக்கதிகமாக வண்டியில் ஏற்றினால் அச்சாணியானது பாரம் தாங்காமல் முறிந்துவிடும் என்பதை வெளிப்படையாகக் கூறிய வள்ளுவர், பகைவர்கள் சிறியவர்களாக இருந்தாலும் அதிகமானால் அவர்கள் வலிமையுள்ள அரசரையும் எளிதில் வென்றுவிடுவர் என்பதை உள்ளிடையாகக் கூறுகிறார்.
- மரக்கொம்பின் நுனியிலே ஏறினார் ஊக்க மிகுதியால் தொடர்ந்து ஏற முயன்றால் அது அவர்தம் உயிருக்கு முடிவை உண்டாக்கும் என்பதனை வெளிப்படையாகக் கூறிய வள்ளுவர், ஒருவர் தனது ஆற்றலின் எல்லையை அறியாமல் தன் வலிக்கு மீறிச் செயலாற்றினால் தம்மையே இழக்க நேரிடும் என்பதை உள்ளிடையாகக் கூறுகிறார்.

**(04 புள்ளிகள்)**

**[04+04+08+04 = 20 புள்ளிகள்]**

4. **கம்பராமாயணம் குகப்படலத்தில்** முத்தேவியர், பரதன் முதலியோர் குகனின் ஓடத்தில் ஏறியதுமுதல், கங்கையைக் கடந்தது வரையிலான பகுதியை அடிப்படையாகக் கொண்டு, பின்வருவனவற்றை விளக்குக.
   (அ) தசரதனின் பெருமை
   (ஆ) கோசலையின் குணச்சிறப்பு
   (இ) கைகேயியின் கொடுமை
   (ஈ) குகனின் அன்பும் வீரமும் (20 புள்ளிகள்)

**(அ)** தசரதனின் பெருமை

- கோக்கள் வைகும் முற்றத்தான்
- நெறி திறம்பாத் தன் மெய்யை நிற்பதாக்கி இறந்தான்

**(05 புள்ளிகள்)**

**ஆ)** கோசலையின் குணச் சிறப்பு

- சுற்றத்தாரும் தேவர்களும் தொழத்தக்க சிறப்புடையளாக இருத்தல்.
- ‘குகனோடு சேர்ந்து நாட்டை அரசாளுக’ எனல்.
- உறவு பெருகுவதால் தன் மகன் காடு சென்றதும் நல்லதே எனல்.
- கன்று பிரிந்த காராம்பசு போல, இராமனின் பிரிவுக்காக வருந்தி நிற்றல்.
- அரச செல்வத்தைத் துறந்த பெருமைக்குரியளாதல்.

**(05 புள்ளிகள்)**

**இ)** கைகேயியின் கொடுமை

- கணவன் சுடுகாடு செல்லவும் இராமன் காடு செல்லவும் பரதன் துன்பமடையும்படியான கொடுஞ்செயலை நினைந்து செய்தவள்.
- படர் எலாம் படைத்தவள்.
- பழியை வளர்க்கும் செவிலித்தாய்.
- வயிற்றில் வளர்ந்த மகனாகிய பரதனுக்கும் உயிர்ப்பாரம் குறையும்படியான செயல் செய்தவள்.
- தான் செய்த கொடுஞ் செயலினால் அனைவரும் வருந்தவும் இடர் இல்லாத முகத்தை உடையவள்.
- இரக்கமில்லாதவள்.
- உலகெல்லாம் தன் மனதில் எண்ணிச் செய்யும் கொடுமையினால் அளவிட்டவள்.

**(05 புள்ளிகள்)**

**ஈ)** குகனின் அன்பு

- இராமனின் அன்னை என்று கேட்டதும் அவள் காலில் விழுந்து அழும் மனத்தை உடையவன்.
- ''இன்துணைவன் இராகவற்கு; இலக்குவற்கும் இளையவற்கும் எனக்கும் மூத்தான்'' எனப் படல்.

குகனின் வீரம்

- ''குன்று அனைய திருநெடுந்தோள் குகன்''
- ''விலங்கல் திண்டோள் கைவீரக் களிறனைய காளை''

**(05 புள்ளிகள்)**

**[05 × 04 = 20 புள்ளிகள்]**

**5.** ந. பிச்சமூர்த்தியின் **நெருக்கடி** என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு,
(அ) சரவணமுத்துவின் வறுமைநிலை
(ஆ) அவரது குண இயல்புகள்
(இ) இன்ஸ்பெக்டரின் மனிதாபிமானம்
(ஈ) சிறுகதை ஆசிரியரின் எடுத்துரைப்பு முறை
ஆகியவற்றை விளக்குக. (20 புள்ளிகள்)

**(அ)**

- 'படிமுதல் வீசம்வரை' என குழந்தைகளின் வகை, தொகை கூறப்பட்டிருத்தல்.
- குழந்தைகள் தேய்ந்து துருப்பிடித்தவை போலக் காணப்படல்.
- குழந்தைகள் உடையும் உடையின்மையுமான தோற்றத்தில் காணப்படுதல்.
- இன்ஸ்பெக்டர் அமர்வதற்கு கிழிந்த பாயைக் கொடுத்தல்.
- ஒருவர் மாறி ஒருவர் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் கிடத்தல்.
- வார்த்தைகளால் சொல்ல இயலாத தாழ்ந்த நிலையில் வீடு காணப்படல்.
- அரசாங்கம் சவுக்குப் பயிரிடுவதற்காகக் கொடுத்த பணத்தை சரவணமுத்து சொந்தத் தேவைகளுக்காகச் செலவழித்தல்.

**(05 புள்ளிகள்)**

**ஆ)**

- சில்லறை சம்பாதிக்கத் தெரியாதவர்.
- உண்மையை வெளிப்படையாகக் கூறுபவர்.
- தவறு எனத் தெரிந்தும் வறுமையால் அதனைச் செய்தவர்.
- நேர்மைக் குணமுடையவர்.
- துன்பத்தில் துவண்டு பேசுபவர்.
- தன்னால் எவரும் துயரடையக் கூடாது என எண்ணுபவர்.
- பிறரது ஆலோசனைகளைக் கேட்டுச் செயற்படுபவர்.
- இயற்கையில் ஈடுபாடு கொண்டவர்.

**(05 புள்ளிகள்)**

**இ)**

- சரவணமுத்து நெருக்கடிக்குள்ளாகிய நிலையை உணர்ந்து சரவணமுத்துவுக்குப் பாதகமாக அமையத்தக்க அறிக்கையை உடனே அனுப்பாது, இருவார கால அவகாசத்தை வழங்கியமை.

வத்தார்

என்று சொன்னீரல்லவா நான் விளக்குக்கு எண்ணெய்யாக இருந்துவிட்டுப் போகிறேன்'' என உதவ முன்வந்தமை.

- தனக்குக் குழந்தைகள் இல்லை, ஓய்வுபெறும் கால எல்லையும் நெருங்கிவிட்டது எனக் கருதிய இன்ஸ்பெக்டர் சரவணமுத்துவின் துயர்தீர, துணையாவோம் என உதவியமை.

**(05 புள்ளிகள்)**

ஈ)

- சரவணமுத்துவின் வறுமைநிலை அவரது குடும்பச் சூழலின் ஊடாக விபரிக்கப்பட்டிருத்தல்.
- உரையாடல்களினூடாக, பாத்திரங்களின் மன உணர்வுகள் வெளிப்படுத்தப்படல்.
- இயற்கைக் காட்சிகளை சரவணமுத்துவின் மன உணர்வுக்கும் நெருக்கடியான சூழலுக்கும் பொருத்தமாக எடுத்துக்கூறல்.
- பொருத்தமான விபரிப்புகள்மூலம் கதைக்களத்தைச் சித்திரித்தல்.

**(05 புள்ளிகள்)**

**[05 × 04 = 20 புள்ளிகள்]**

6. **தமிழர் நாகரிகத்தில் கிராம வாழ்க்கை** என்ற புதுமைப்பித்தனின் கட்டுரையினை அடிப்படையாகக் கொண்டு, பின்வருவனவற்றை விளக்குக.
   (அ) கிராமத்து வாழ்க்கையின் தனித்துவமான பண்புகள்
   (ஆ) கிராமத்தாருக்கு நகரத்தில் உள்ள இடர்பாடுகள்
   (இ) 'இராவண கைங்கரியம்' என்பதன் மூலம் ஆசிரியர் கூற விழைவது
   (ஈ) ஆசிரியரின் மொழிநடை

(20 புள்ளிகள்)

**(அ)**

- இயற்கையோடு ஒட்டிய வாழ்வு
  - ஆறு நிறையத் தண்ணீர், உடம்புக்குள் உயிர் பெய்வது போல் தென்றல்
- கிராமத்திற்கேற்ற தனித்துவமான அடையாளம்
  - கிராம முனிஸீப், கணக்கப்பிள்ளை, தலையாரி, மறவர் குலம் என ஒழுங்கமைப்பட்ட சமூக அமைப்பு
- கிராமத்தவரின் குணப் பண்புகள்
  - எதனையும் வெளிப்படையாகச் சொல்லும் மனப்பாங்கு
  - உள்ளத்தில் பரிவு
  - நகர மக்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாக அமைதல்
  - எல்லோரையும் தம்மோடு இணைத்து வாழ்தல்
  - தமது கிராமத்தின் வரலாற்றை அறிந்திருத்தல்

  - அன்னவிசாரமாய் விளங்குதல்
  - பசிப்பகையை விரட்டும் இடமாகக் காணப்படல்
- விவசாயத்தை ஆதாரமாகக் கொண்டிருத்தல்
- பேராய்ச்சி கோயில், அவளுக்கான சடங்கு, நம்பிக்கை

**(05 புள்ளிகள்)**

**ஆ)**

- தன்னிச்சையாக நடமாடித் திரிவதற்குரிய இடவசதி இன்மை.
- பட்டணத்தின் ஒழுங்கமைக்கப்பட்ட வாழ்க்கைமுறை, ஜன நெருக்கடி ஆகியன கிராமத்தவருக்குப் பொருந்தாமை.
- முங்கி முழுகிக் குளிக்க பட்டணத்தின் குழாய்த் தண்ணீர் உகந்ததாக அமையாமை.
- குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே பட்டணத்தில் உணவு கிடைகின்றமை.

**(05 புள்ளிகள்)**

**இ)**

- சீதையைச் சிறையெடுத்தபோது மண்ணோடு சேர்த்துத் தூக்கிச் சென்ற இராவணனின் செய்கையே இராவண கைங்கர்யம் எனப்படுகிறது.
- கிராமத்திற்குக் குடியிருக்கச் செல்லும் நகரவாசிகள், பட்டணத்தில் கொஞ்சம் பெயர்த்துக்கொண்டு போய்க் கிராமத்தில் போட்டு அதன்மேல் உட்கார்ந்துகொள்ள எத்தனிக்கின்றனர்.

**(05 புள்ளிகள்)**

**ஈ)** ஆசிரியரின் மொழிநடை

- சரளமான வருணனைப் பாங்கு
- எள்ளல்
- வாசகரோடு நெருங்கி உறவாடும் தன்மை
- பெரும்பாலும் சிறுவாக்கியங்கள்
- பேச்சு வழக்குச் சொற்கள், சொற்றொடர்களின் பயன்பாடு
- பிறமொழிச் சொற்களின் பயன்பாடு

**(05 புள்ளிகள்)**

**[05 × 04 = 20 புள்ளிகள்]**

7. மகாகவி பாரதியாரின் **கண்ணம்மா என் காதலி, பெண் விடுதலை, பாஞ்சாலி சபதம்** ஆகிய கவிதைப்பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு, பின்வருவனவற்றை விளக்குக.
(அ) கண்ணம்மா மீதான பாரதியின் ஈடுபாடு
(ஆ) பெண்விடுதலை பற்றிய அவரது நிலைப்பாடு
(இ) அரசாட்சி நடைபெறவேண்டிய விதம் குறித்த அவரது எதிர்பார்ப்பு (20 புள்ளிகள்)

**(அ)**

- கைகளின் தொடுகைமூலம் கண்ணம்மாவை அடையாளங் காணல்.
- பட்டுடையின் வாசனையால் அவளை அடையாளங் காணல்.
- அண்மித்தலால் ஏற்படும் உவகை ஊற்றினால் அவளை அடையாளங் காணல்.
- ஒன்றிப்போன இரண்டு இதயங்களின் இணைப்பினால் அடையாளங் காணல்.
- கண்ணம்மாவைத் தழுவுதல்.
- இயற்கையின் அனைத்து அம்சங்களிலும் கண்ணம்மாவையே கண்டதாகக் கூறுதல்.

**(07 புள்ளிகள்)**

**ஆ)**

- பெண்கள் விடுதலை அடைய வேண்டும் என்பதில் திடமான நம்பிக்கை கொண்டிருத்தல்.
- ஆணும் பெண்ணும் சரி நிகர், உரிமை உடையவர்கள் என்னும் நிலைப்பாடு.
- இடைக்காலத்திலேயே பெண்கள் கீழ்நிலை அடைந்தனர் என்ற வரலாற்றுப் புரிதல்.
- இகழ்ச்சிகள் தேய்ந்து, பெண்கள் திறமையால் மேனிலை அடையவேண்டும் என்னும் விருப்பம்.
- அறிவு, பயிற்சி, துணிவு என்பவற்றால் விடுதலையடைய பெண்களுக்கு மார்க்கம் கூறுதல்.
- பெண்விடுதலை ஊடாக தேச விடுதலைக்கும் பங்களித்தல்.

**(07 புள்ளிகள்)**

**இ)**

- நாட்டையோ நாட்டு வளங்களையோ பிறர்க்கு விற்பனை செய்யாத ஆட்சி.
- நாட்டு மக்கள் அனைவரையும் தம்மைப்போல் கருதும் ஆட்சித் தலைவன்.
- உண்மை நூல்களைப் பேணி, நீதிபரிபாலனம் செய்யும் ஆட்சி.

காண்டு

நாட்டை ஆளும் முறைமை.

**(06 புள்ளிகள்)**

**[07+07+06 = 20 புள்ளிகள்]**

**8.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.

(அ) **தேம்பாவணியின் காட்சிப்படலத்தில்** சாந்தி - மரியாள் ஆகியோரின் உரையாடல் ஊடாக வெளிப்படுத்தப்படும் யேசுவின் புகழ்

(ஆ) **தமிழர் நாகரிகத்தில் கிராம வாழ்க்கை** என்ற கட்டுரையில் ஔவையாரிடத்துப் புதுமைப்பித்தன் கொண்ட ஈடுபாடு புலப்படுமாறு

(இ) சிறந்த சம்பாஷணை ஒன்று எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றிய வ. ரா. வின் கருத்து

(ஈ) **எல்லாம் உமதே** என்ற கவிதையினூடாக, கவிஞர் ஏ. எம். அபூபக்கர் தொழிலாளர் புரட்சியை ஊக்குவிக்கும் முறைமை

(உ) நீலாவணனின் **தொண்டு** என்ற கவிதையில், சுயநலவாதிகளின் போலித்தனம் சித்திரிக்கப்படுமாறு

(20 புள்ளிகள்)

**அ)**

- எதிர்காலத்தில் நடக்க இருப்பதனை முன்கூட்டியே அறியும் ஆற்றல்மிக்கவன்.
- மக்களுக்கு அவர்களுடைய ஆசைக்கும் அதிகமாகக் கொடுப்பவன்.
- மண்ணுலக மக்களின் துயரைப் போக்குவதற்காகத் துன்பத்தைக்கூடப் பொருட்படுத்தாது மண்ணுலகில் வந்து உதித்தவன்.
- அரசனுக்குத் துணையாகவுள்ள படைக்கலன்கள், படைவீரர்கள், பிற சிறப்புகள் இன்றித் தோன்றியவன்.
- தனித்துச் செயல் புரியும் வல்லமையுடையவன்.
- ஒரு செயலை நினைத்த மாத்திரத்திலேயே செய்து முடிப்பவன்.
- இவ்வுலகத்தை ஆட்சிசெய்யும் மன்னர் யாவரும் தன் முன் அஞ்சி நடுங்கும் வல்லமையுடையவன்.
- அவனை வணங்குபவர்கள் மட்டுமே உலகில் மீதியாக எஞ்சுவார்கள்.
- தாயும் தந்தையும் இல்லாமல் விளங்குபவன்.

**(10 புள்ளிகள்)**

**ஆ)**

- விவசாயத்தின் மேன்மை குறித்த ஔவையாரின் கருத்தை வலியுறுத்துதல்
  "மேழி பிடிக்கும் கை..."
- பட்டணத்து நாகரிகம் பற்றிய ஔவையாரின் விமர்சனத்தைக் கூறுதல்
  "அண்டி நெருக்குண்டேன்..."
- கிராமத்தவரின் உள்ளப் பண்பை வெளிப்படுத்தும் விதத்தை விளக்குதல்.
- கிராமத்தில் விருந்தோம்பற் பண்பு சிறந்தோங்கி இருந்தமையை ஔவையார் பாடல்கள்

  "அடகென்று சொல்லி..."

  "வரகரிசிச் சோறும்..."
- ஔவையாரை வர்ணிக்க அவர் கையாண்டுள்ள வார்த்தைகள், ஔவையாரின் ஆளுமையினால் அவர் வசீகரிக்கப்பட்டமையைப் புலப்படுத்துதல்.

**(10 புள்ளிகள்)**

இ)

- கலையழகும் கட்டுப்பாடும் இனிமையும் நிறைந்ததாய் இருத்தல்.
- அர்த்தமும் ரஸமும் பாவமும் விரவியிருத்தல்.
- இதமும் இங்கிதமும் கொண்டிருத்தல்.
- காலம், இடம் அறிந்து பேசுதல்.
- கூறமுனைந்த பொருளை மற்றவரும் அதேவகையில் பொருளுணரும் வண்ணம் பேசுதல்.
- கேட்பவரைக் கவர்ந்திழுப்பதாக அமைதல்
- விடயத்தை விளக்கமாகவும் தெளிவாகவும் எளிமையாகவும் முன்வைத்தல்.
- சங்கீதத்தின் கவர்ச்சியையும் வேதத்தின் உட்பொருளையும் கவிதையின் கற்பனாசோபையையும் கழைக்கூத்தர்களின் ஜாலவித்தையையும் கொண்டிருத்தல்.
- போலிப் புலமையை வெளிப்படுத்தும் சொற்களைப் பயன்படுத்தாதிருத்தல்.
- உண்மையானதும் இயற்கையானதுமான அர்த்தத்தில் பொருள்கொள்ளல்.
- சொல்லப்போகும் விடயத்தை மனதில் தெளிவுபடுத்திக்கொண்டு பேசுதல்.
- பிறரை அவமானப்படுத்தாமல் பேசுதல்.

**(10 புள்ளிகள்)**

ஈ)

- உழைப்பாளிகளின் அவலத்தை எடுத்துக்கூறுதலினூடாகப் புரட்சியை ஊக்குவித்தல்.
  - உழுது வாழ்பவன் உணவின்றித் தவித்தல்.
  - ஆடை நெய்பவன் ஆடைக்கு வழியின்றித் தவித்தல்
- தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டி வாழும் செல்வந்தர்களின் நிலையைக் கூறி, அதனூடாகப் புரட்சியைத் தூண்டுதல்.
  - செல்வர் உழைப்பவரை உறுஞ்சி வாழ்தல்
  - மூக்குமுட்ட உண்ணுதலும் பட்டுத்துணியால் கைதுடைத்தலும்
- புரட்சிக்கான விழிப்புணர்வைத் தூண்டும் வகையிலான சொல்லாட்சிப் பயன்பாடு.
  - சோடையுற்ற சொறிநாயாய்ச் சோம்பி நின்றது போதுமடா
  - ஆக்கம் செய்த கரங்களினால் அழிவு செய்ய எழுங்களடா

**(10 புள்ளிகள்)**

உ)

தை

தோலுரித்துக் காட்டுகிறது.

- குறியீடு மூலமாக வெளிப்படுத்துதல்.
  பசு - துன்பத்துள் வாடும் மக்கள்
  காக்கைகள் - சுரண்டுபவர்

**(10 புள்ளிகள்)**

**[10 × 02 = 20 புள்ளிகள்]**

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)
# தமிழ் II
# புள்ளி வழங்கும் திட்டம்

இவ்வினாத்தாளிற் கொடுக்கப்பட்டுள்ள எட்டு வினாக்களுள், முதலாம் பகுதியிலுள்ள முதலாம், இரண்டாம், மூன்றாம் வினாக்களுக்கும், இரண்டாம் பகுதியிலுள்ள ஐந்து வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்குமாக ஐந்து வினாக்களுக்குப் பரீட்சார்த்திகள் விடை எழுத வேண்டும்.

## பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | **இலக்கணம்** | | | |
| | $01 \times 20$ | | = 20 புள்ளிகள் | **20 புள்ளிகள்** |
| 02. | அ. | சுருக்கம் | = 13 புள்ளிகள் | |
| | ஆ. | கிரகித்தல் | = 12 புள்ளிகள் | **25 புள்ளிகள்** |
| 03. | கட்டுரை | | | |
| | | பொருள் | = 12 புள்ளிகள் | |
| | | மொழிநடை | = 08 புள்ளிகள் | |
| | | அமைப்பு | = 05 புள்ளிகள் | **25 புள்ளிகள்** |

## பகுதி II

| | | | |
|---|---|---|---|
| 04. | அ. | 05 புள்ளிகள் | |
| | ஆ. | 05 புள்ளிகள் | |
| | இ. | 05 புள்ளிகள் | **15 புள்ளிகள்** |
| 05. | அ. | 05 புள்ளிகள் | |
| | ஆ. | 05 புள்ளிகள் | |
| | இ. | 05 புள்ளிகள் | **15 புள்ளிகள்** |
| 06. | அ. | 05 புள்ளிகள் | |
| | ஆ. | 05 புள்ளிகள் | |
| | இ. | 05 புள்ளிகள் | **15 புள்ளிகள்** |
| 07. | அ., ஆ., இ., ஈ. | பரீட்சார்த்திகளின் இரண்டு தெரிவுகளுக்கு தலா 07 ½ புள்ளிகள் வீதம் வழங்குக. | **15 புள்ளிகள்** |
| 08. | அ. | 10 புள்ளிகள் | |
| | ஆ. | 05 புள்ளிகள் | **15 புள்ளிகள்** |

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

| | |
|---|---|
| දෙමළ | II |
| தமிழ் | II |
| Tamil | II |

72 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

| | | |
|---|---|---|
| අමතර කියවීම් කාලය | - | මිනිත්තු 10 යි |
| மேலதிக வாசிப்பு நேரம் | - | 10 நிமிடங்கள் |
| Additional Reading Time | - | 10 minutes |

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

சுட்டெண் : ......................................

**அறிவுறுத்தல்கள் :**

✳ பகுதி **I** இல் உள்ள **மூன்று** வினாக்களுக்கும் பகுதி **II** இல் உள்ளவற்றுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கும் எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

✳ பகுதி **I** இல் முதலாம் வினாவில் **இருபது** வினாக்கள் **தனியாகத்** தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதி, அதனை உமது ஏனைய விடைத்தாள்களின்மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.

## பகுதி I

**1.** **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 பின்வருவனவற்றுள் கூட்டுயிர்
(1) அ (2) இ (3) ஐ (4) ஓ (5) உ (**03**)

1.2 பின்வருவனவற்றுள் கடையண்ண வெடிப்பொலி
(1) ப் (2) ங் (3) த் (4) க் (5) ட் (**04**)

1.3 பின்வருவனவற்றுள் உடம்படு மெய்யாகத் தோன்றும் எழுத்து
(1) ம் (2) வ் (3) த் (4) க் (5) ன் (**02**)

1.4 பின்வருவனவற்றுள் - இன் - சாரியை பெற்றுப் புணர்ந்த சொல்
(1) எழுதினேன் (2) பாடினான் (3) கடலுக்கு
(4) நாட்டுக்கு (5) வீட்டிற்கு (**05**)

1.5 பின்வருவனவற்றுள் வினையடி விகாரப்பட்டுப் புணர்ந்த சொல்
(1) செத்தான் (2) எழுதினான் (3) படித்தான்
(4) செலுத்தினான் (5) வெறுத்தான் (**01**)

1.6 பின்வருவனவற்றுள் பகாப்பதம்
(1) படிப்பு (2) தொகுப்பு (3) இழுப்பு
(4) நடப்பு (5) நெருப்பு (..05..)

1.7 **எடுத்துக்கொண்டிருந்தான்,** இச்சொல்லின் பகுதி
(1) எடு (2) எடுத்து (3) எடுத்துக்கொண்டிரு
(4) எடுத்துக்கொள் (5) எடுத்துக்கொள்ள (..03..)

1.8 பின்வருவனவற்றுள் கூட்டுப்பெயர்
(1) சின்னக் கதை (2) சிறிய கதை (3) சிறந்த கதை
(4) சிறுகதை (5) தெரிந்த கதை (..04..)

1.9 பின்வருவனவற்றுள் வேற்றுமைத் தொகை
(1) பணப்பை (2) மழைக்கை (3) கருநாகம்
(4) சுடுசோறு (5) வெண்முகில் (..01..)

1.10 பின்வருவனவற்றுள் - ஆல் உருபு காரணப் பொருளில் வந்துள்ள தொடர்
(1) வைத்தியரால் குணமடைந்த நோயாளி
(2) வெள்ளத்தால் அழிந்த பயிர்கள்
(3) களிமண்ணால் செய்த சிற்பம்
(4) மரத்தால் விழுந்தவன்
(5) இயந்திரக் கலப்பையால் உழப்பட்ட நிலம் (..02..)

1.11 பின்வருவனவற்றுள் தனிவினை
(1) நடக்கிறார்கள் (2) கைதுசெய்தார்கள் (3) தட்டிவிட்டான்
(4) காத்திருந்தேன் (5) முன்னேறுவோம் (..01..)

1.12 பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினையாகவும் குன்றா வினையாகவும் வரும் வினை
(1) சிரி (2) எரி (3) புரி (4) நடி (5) பிழி (..02..)

1.13 பின்வருவனவற்றுள் உகரம்கெட்டு ஈற்றுமெய் இரட்டித்து இறந்தகாலம் காட்டும் வினை
(1) எடு (2) இரு (3) கொடு (4) தடு (5) பெறு (..05..)

1.14 பின்வருவனவற்றுள் **வா** என்பது துணைவினையாகப் பயன்படும் வாக்கியம்
(1) நான் ஊருக்குப் போய் வந்தேன்
(2) கடிதம் நேற்றே வந்துவிட்டது
(3) நான் குளித்துவிட்டு வந்தேன்
(4) காலநிலை மாறி வருகிறது
(5) அப்பா இன்னும் வரவில்லை (..04..)

1.15 பின்வருவனவற்றுள் **தான்** இடைச்சொல்லாக வரும் வாக்கியம்
(1) அவன் தான் வரவில்லை என்றான்
(2) அவன் தானும் வருவேன் என்றான்
(3) அவன் தானாக வந்தான்
(4) அவன் தான் செய்வதாகச் சொன்னான்
(5) அவன் தான் செய்தான் (..05..)

1.16 பின்வருவனவற்றுள் பெயரடை
(1) எழுதப்பட்ட (2) மென்மையாக (3) கற்றுக்கொண்ட
(4) மென்மையான (5) சுறுசுறுப்பாக (04.....)

1.17 பின்வருவனவற்றுள் கூட்டு வாக்கியம்
(1) நான் அப்பாவுடன் நேற்று ஊருக்குப் போனேன்.
(2) நான் அப்பாவுடன் ஊருக்குப்போய் நேற்று வந்தேன்.
(3) நான் நேற்று அப்பாவுடன் ஊருக்குப் போகவில்லை.
(4) நான் அப்பாவுடன் ஊருக்குப் போக விரும்பினேன்.
(5) அப்பா வராவிட்டால் நான் ஊருக்குப் போகமாட்டேன். (02.....)

1.18 பின்வருவனவற்றுள் நிபந்தனை எச்ச வாக்கியத்தொடர் இடம்பெற்றுள்ள வாக்கியம்
(1) அண்ணன் போனதால் நான் போகவில்லை.
(2) நீ கேட்டால் அப்பா பணம் தருவார்.
(3) நான் கேட்டதால் அப்பா பணம் தரவில்லை.
(4) மழை பெய்வதால் வெளியே போக முடியவில்லை.
(5) அவன் வருவதால் ஒரு பயனும் இல்லை. (02.....)

1.19 "நான் ஆங்கிலம் படிக்க விரும்பியதை அப்பா பாராட்டினார்" இவ்வாக்கியத்தில் இடம்பெறும் 'ஆங்கிலம் படிக்க' என்பது,
(1) நிரப்பி வாக்கியத் தொடர்
(2) வினைத்தொடர்
(3) பெயரெச்ச வாக்கியத் தொடர்
(4) வினையடைத் தொடர்
(5) சமநிலை வாக்கியத் தொடர் (01.....)

1.20 பின்வருவனவற்றுள் பிழையான வாக்கியம்
(1) 2005 இல் நான் பிறந்தேன்.
(2) 1980 களில் ஈழத்துக் கவிதைப் போக்கில் ஒரு மாற்றம் ஏற்பட்டது.
(3) 2020, 2021 ஆம் ஆண்டுகளில் உலக நாடுகள் பாரிய நெருக்கடியை எதிர்கொண்டன.
(4) 1950, 1960 களில் இலங்கையில் முற்போக்கு இலக்கியம் வளர்ச்சி பெற்றது.
(5) 1958 களில் இலங்கையில் இனக்கலவரம் நிகழ்ந்தது.
(05.....)

(20 புள்ளிகள்)

* *

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

දෙමළ II
தமிழ் II
Tamil II

72 T II

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் உள்ள **2**ஆம், **3**ஆம் வினாக்களுக்கும்,

※ பகுதி **II** இல் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

**2.** (அ) பின்வரும் உரைப்பகுதியை **50** சொற்களில் சுருக்கி எழுதுக.

விஞ்ஞான முன்னேற்றம் என்பது இல்லாத அந்தப் பழைய நாளில் மனிதர்கள் வாழ்க்கை வசதிகளில் குறைந்து இருந்திருக்கலாம். மணிக்கு நான்கு மைல் வேகத்திற்குமேல் போக முடியாதவர்களாக இருந்திருக்கலாம். விண்ணை முட்டும் மாடமாளிகைகள் கட்டிக்கொள்ளத் தெரியாமல் நாணல் குடிசைகளில் வாழ்ந்திருக்கலாம். என்றாலும் என்ன? குடிசையில் வாழ்ந்து பசி எடுத்தபொழுது வேட்டையாடி வயிறு வளர்த்த அவர்கள் மன அமைதியோடு வாழ்ந்தார்கள் என்பதை மறுக்க இயலாது. வாழ்க்கை வசதிகளும் நாகரிகமும் மிகுதியாகப் பெற்றுள்ளதன் பயனாக இன்று நாம் அமைதியை இழந்து நிற்கின்றோம். "வானையும் மண்ணையும் பரிசாகப் பெற்றுத்தான் என்ன பயன்? அந்தப் பேரத்தில் நம்முடைய ஆன்மாவை நாம் இழப்பதானால்" என்று ஷேக்ஸ்பியர் கூறுவது இங்கே நினைவு கூரத்தக்கது.

இம் முன்னேற்றங்களால் பெற்ற பயன் யாது? இந்த முன்னேற்றங்களும் வசதிகளும் கிடைத்து விட்டமையால் மனிதனுடைய உடல் உழைப்பு ஓரளவு குறைந்தது என்னமோ உண்மை. உடல் உழைப்பையும் அதன் பயனாக ஏற்படுகின்ற களைப்பையும் அதிகம் பெற்றிருந்த பழங்கால மனிதன், அவ்வுழைப்பின் பின்னரும் அமைதியோடு உறங்க முடிந்தது. அந்தப் பழைய மனிதனுக்கும் பகை, போட்டி, பொறாமை என்பவை இருந்தன. ஆனால் அவையனைத்தும் அவனுடைய வாழ்க்கை முழுவதையும் ஆட்கொள்ளாமல் அவனுள் ஓரளவு அடங்கி நின்றதாக அறிகின்றோம். இன்றைய மனிதனைப் பொறுத்தமட்டில் பிற வசதிகளும் வாய்ப்புகளும் வளர்ச்சி அடைந்ததைப் போலவே இந்தப் பொறாமை, போட்டி, சகிப்புத்தன்மை இன்மை, வெறுப்புணர்ச்சி, காழ்ப்பு ஆகியவையும் வளர்ந்துள்ளன என்று கூறும்பொழுது காலத்திற்கேற்ப ஓரளவு வளர்ந்து இருக்குமாயின் அதனைப் பெரிதாகப் பாராட்டமாட்டோம். ஆனால் இன்றைய மனிதனை மூழ்கடிக்கும் அளவிற்கு அல்லவா அவை வளர்ந்துவிட்டன.

அன்றாடம் செய்தித்தாள்களைப் படிக்கின்றவர்களும் உலகைச் சுற்றி வருகின்றவர்களும் ஒன்றைக் கண்டு வியப்பு அடையாமல் இருக்கமுடியாது. ஒரு புறம் மனிதனின் வாழ்க்கையை வளம்படுத்தும் வசதிகள் மலைபோல் வளர்ந்துள்ளன. அதன் எதிர்ப்புறம் அவனையே துயர்ச் சூழலில் அழுத்திவிடும் பிரச்சினைகளும் மலைபோல் வளர்ந்துள்ளன. இவை இரண்டின் இடையே அகப்பட்டு இன்றைய மனிதன் செல்லும் திசை அறியாது தத்தளிக்கின்றான். எவற்றை வசதிகள் என்று நம்பி வளர்த்தானோ, எவற்றால் தனக்கு ஓய்வும் அமைதியும் கிட்டும் என்று கருதினானோ அவையே அவனை மூழ்கடிக்கும் கருவியாக அமைந்துவிட்டதைக் கண்டு இன்றைய மனிதன் திகிலடைகிறான்.

(13 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

தமிழ் வசன நடை இப்போதுதான் பிறந்து பல வருசமாகவில்லை. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும். அதனால், இப்போதே நமது வசனம் உலகத்தில் எந்த பாஷையைக் காட்டிலும் தெளிவாக இருக்கும்படி முயற்சிகள் செய்யவேண்டும். கூடியவரை பேசுவது போலவே எழுதுவது தான் உத்தமமென்பது என்னுடைய கட்சி. எந்த விஷயம் எழுதினாலும் சரி, ஒரு கதை அல்லது ஒரு தர்க்கம், ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிகை விஷயம் எதை எழுதினாலும் வார்த்தை சொல்லுகிற மாதிரியாகவே அமைந்து விட்டால் நல்லது.

பழக்கமில்லாத ஒரு விஷயத்தைக் குறித்து, அதாவது ஜனங்களுக்குச் சற்றேனும் பழக்கமில்லாமல் தனக்கும் அதிக பழக்கமில்லாத ஒரு விஷயத்தைக் குறித்து எழுத ஆரம்பித்தால் வாக்கியம் தத்தளிக்கத்தான் செய்யும், சந்தேகமில்லை. ஆனாலும் ஒரு வழியாக முடிக்கும்போது, வாய்க்கு வழங்குகிறதா என்று வாசித்துப் பார்த்துக்கொள்ளுதல் நல்லது. அல்லது, ஒரு நண்பனிடம் படித்துக் காட்டும் வழக்கம் வைத்துக்கொள்ள வேண்டும்.

சொல்ல வந்த விஷயத்தை மனதிலே சரியாகக் கட்டி வைத்துக்கொள்ள வேண்டும். பிறகு கோணல், திருகல் ஒன்றுமில்லாமல், நடை நேராகச் செல்ல வேண்டும். ஆரம்பத்திலே, மனதிலே கட்டி முடித்த வசனங்களையே எழுதுவது நன்று. உள்ளத்திலே நேர்மையும் தைரியமுமிருந்தால், கை பிறகு தானாகவே நேரான எழுத்து எழுதும். தைரியம் இல்லாவிட்டால் வசனம் தள்ளாடும். சண்டிமாடு போல ஓரிடத்தில் வந்து படுத்துக்கொள்ளும்; வாலைப்பிடித்து எவ்வளவு திருகினாலும் எழுந்திருக்காது. வசன நடை, கம்பர் கவிதைக்குச் சொல்லியது போலவே, தெளிவு, ஒளி, தண்மை, ஒழுக்கம் இவை நான்குமுடையதாயிருக்க வேண்டும். இவற்றுள் ஒழுக்கமாவது தட்டுத்தடையில்லாமல் நேரே பாய்ந்து செல்லும் தன்மை. நமது தற்கால வசன நடையில் சரியான ஓட்டமில்லை. தள்ளாட்டம் அதிகமாகக் காணப்படுகிறது. உள்ளத்திலே தமிழ்ச் சக்தியை நிலைநிறுத்திக் கொண்டால், கை நேரான தமிழ் நடை எழுதும்.

(சுப்பிரமணிய பாரதியார்)

(i) தமிழ் வசன நடை எப்படி வளர வேண்டும் என்று சுப்பிரமணிய பாரதியார் கருதினார்?

(ii) பரிச்சயம் இல்லாத ஒரு விடயத்தைப் பற்றி எழுதுமிடத்து அது வாய்க்கு வழங்குகிறதா என்பதை நிச்சயிக்க என்ன செய்யலாம்?

(iii) நல்ல வசனநடைக்கு இருக்க வேண்டிய நான்கு பண்புகள் யாவை?

(iv) வசன நடையின் ஒழுக்கம் என்று ஆசிரியர் கருதுவது எதனை?

(v) வாக்கியம் எவ்விடத்துத் தடுமாறக்கூடும்?

(vi) இப்பகுதியிலே எடுத்தாளப்பட்டுள்ள மூதுரையை எடுத்துக்காட்டி விளக்குக.

(12 புள்ளிகள்)

(13 + 12= 25 புள்ளிகள்)

(அ) சுருக்கம்

- விஞ்ஞான முன்னேற்றம் இல்லாத பழைய வாழ்வில் மனிதர்கள் மன அமைதியோடு வாழ்ந்தார்கள்.
- வாழ்க்கை வசதிகளும் நாகரிக மேம்பாடும் மனிதனது மன அமைதியைக் குலைத்து விட்டன.
- உடல் உழைப்பில் தங்கியிருந்த பழங்கால மனிதனது பிரச்சினைகள் அவனுள் அடங்கியிருந்தன. இதனால் அவனால் அமைதியாக உறங்க முடிந்தது. ஆனால் இன்றோ வசதி வாய்ப்புக்கள் அதிகரித்தது போலவே பிரச்சினைகளும் அதிகரித்து மனிதனை மூழ்கடிக்கும் அளவுக்கு வளர்ந்துவிட்டன.
- வசதிகள் என நம்பித் தான் வளர்த்தவையே தன்னை மூழ்கடிக்கும் பிரச்சினைகளாகி விட்டமையைக் கண்டு மனிதன் திகிலடைகின்றான்.

உள்ளடக்கம் 08

வெளிப்பாட்டுத்திறன் 05

**(08 + 05 = 13 புள்ளிகள்)**

(ஆ)

(i)
- நமது வசனம் உலகத்தில் எந்த பாஷையைக் காட்டிலும் தெளிவாக இருக்கும்படி முயற்சிகள் செய்ய வேண்டும்.
- கூடியவரை பேசுவது போலவே எழுதுவது உத்தமம்.

(ii) எழுதியதை வாசித்துப் பார்க்க வேண்டும் அல்லது ஒரு நண்பனிடம் படித்துக் காட்ட வேண்டும்.

(iii) தெளிவு, ஒளி, தண்மை, ஒழுக்கம்.

(iv) எழுதும்போது தட்டுத்தடையில்லாமல் நேரே பாய்ந்து செல்லும் தன்மை.

(v) உள்ளத்திலே நேர்மையும் தைரியமும் இல்லாதவிடத்து வசனம் தள்ளாடும்.

(vi) "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" - இளமையில் பழகுகின்ற பழக்கம் இறப்புவரை தொடரும்.

**(02 × 06 = 12 புள்ளிகள்)**

**ள்ளிகள்]**

**3.** பின்வருவனவற்றுள் யாதேனும் **ஒரு** தலைப்பினைத் தெரிந்து **300 - 350** சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

(அ) உடல் நலமும் உள நலமும்

(ஆ) 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'

(இ) உள்ளூர் உற்பத்தியும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியும்

(ஈ) நவீன தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி மனிதர்களுக்கிடையிலான நேரடித் தொடர்பாடலை ஊறுபடுத்தியுள்ளது.

(உ) தமிழ் வளர்ச்சிக்கான பேராசிரியர் வண. சேவியர் தனிநாயக அடிகளின் பணிகள்

(25 புள்ளிகள்)

(அ) உடல் நலமும் உள நலமும்

- அறிமுகம்
- மனிதனுடைய மகிழ்ச்சியான வாழ்விற்கு உடல், உள ஆரோக்கியம் அவசியமானது.
- மனிதன் பயனுள்ள வாழ்க்கையைப் பெற்று நீண்ட ஆயுளோடு வாழ்வதற்கு உடல் நலம், உள நலம் அவசியம்.
- உடல் நலமும், உள நலமும் ஒன்றில் ஒன்று தங்கியிருப்பதால் மனிதனின் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு அவை அவசியமாகின்றன.
- உடலுக்குத் தேவையான ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கம், உடற்பயிற்சிகளை மேற்கொள்ளல், மகிழ்ச்சியைத் தரக்கூடிய பொழுதுபோக்குகளைப் பின்பற்றல் முதலானவற்றால் இந்த ஆரோக்கியத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் இல்லாவிடில் உடல், உள ஆரோக்கியம் கெட்டு வருந்த நேரிடும்.

(ஆ) "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"

- எண், எழுத்துப் பற்றிய விளக்கம்
    - எண் என்பது அறிவியலையும் எழுத்து என்பது மொழி அறிவையும் குறிக்கவல்லது
    - கண், பிறரையும் பிற பொருளை அறியவும் துணை செய்வது.
    - கண்ணைப் போன்று எண்ணும் எழுத்தும் அறிவு வளர்ச்சிக்கு ஆதாரமாக அமைவது. இதனால் மனிதர்கள் உயர்ச்சி பெறுவர். எனவே எண்ணையும் எழுத்தையும் கண்ணைப் போன்று பேணவேண்டும்.
- எண்ணாகிய அறிவியலும் எழுத்தாகிய மொழிசார் செயற்பாடுகளும் இரு கண்களாகப் போற்றப்படும்போது வாழ்வு உயரும், செம்மை பெறும்.

(இ) உள்ளூர் உற்பத்தியும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியும்

- நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு உள்ளூர் உற்பத்தி அவசியமாதல்.
- உள்ளூர் உற்பத்திகள்
  - விவசாயம்
  - கைத்தொழில்
  - பாரம்பரிய உற்பத்திப் பொருட்கள்
  - கைவினைப் பொருட்கள்
- உற்பத்தி வளர்ச்சி
  - நிலங்களின் பயன்பாடு
  - உற்பத்திப் பெருக்கம்
  - தன்னிறைவு
  - தொழில் வாய்ப்பு
- பொருளாதார வளர்ச்சி
  - ஏற்றுமதி அதிகரித்து இறக்குமதி குறைவடைதல்
  - அந்நியச் செலாவணி மூலம் நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்படல்.

(ஈ) நவீன தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி மனிதர்களுக்கிடையிலான நேரடித் தொடர்பாடலை ஊறுபடுத்தியுள்ளது.

- சமூகவாழ்வில் நேரடித் தொடர்பாடலின் முக்கியத்துவம்.
  - நேரடித் தொடர்பில் உயர்ந்த பண்பாடும் மனவளர்ச்சியும் உண்டானது.
  - மனிதர்களுக்கிடையே ஒற்றுமையும் சகவாழ்வும் நிலைபெற்றது.
- தகவல்களை இணக்கமான சூழலில் பரிமாறுவதற்கான சாத்தியப்பாடு தொழில்நுட்ப வளர்ச்சியில்லாத காலத்தில் அதிகமாகக் காணப்பட்டது.
  - தற்காலத்தில் இணையவழியில் அறிமுகமான பன்முகத்தொடர்பு முறைகள் ஒருவரையொருவர் நேரே சந்திக்க முடியாத அளவில் தமது செல்வாக்கினை ஏற்படுத்தியுள்ளன.
  - வைபர் (viber) புலனம் (watsap) நிகழ்நிலை (Zoom) டீம் (Teams) முதலிய செயலிகளின் பயன்பாடுகள் அதிகரித்தல்.
- நவீன தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி நேரடித் தொடர்பில் ஏற்படுத்திய பாதிப்பு.
  - நபர்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு, ஒத்துழைப்பு இல்லாமை.
  - அந்நியமயப்படுதல்

(உ) தமிழ் வளர்ச்சிக்கான பேராசிரியர் வண. சேவியர் தனிநாயக அடிகளின் பணிகள்.

- வண. சேவியர் தனிநாயக அடிகளார் குறித்த பொதுஅறிமுகம். (1913- 1980)
- ஆளுமை உருவாக்கப் பின்புலம் (கல்வியும் தொழிலும்)
- கல்விப்பணிகள்
    - கல்வியியல் விரிவுரையாளர் (பேராதனைப் பல்கலைக்கழகம்)
    - மலாயாப் பல்கலைக்கழக இந்தியவியல் துறைத்தலைவர், பேராசிரியர். பீடாதிபதி
- தமிழ்ப்பணிகள்
    - தமிழ் இலக்கியக் கழகம், தமிழ்ப் பண்பாட்டுக்கழகம் என்பவற்றின் நிறுவுனர்.
    - தமிழ்க் கல்சர் ( Tamil Culture) காலாண்டுச் சஞ்சிகையின் ஆசிரியர். இச்சஞ்சிகைக்கூடாகத் தமிழியல் ஆய்வுக்குக்களம் அமைத்துக் கொடுத்தமை.
    - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை நிறுவ முன்னின்று உழைத்தமை.
    - உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளை நடத்தியமை. தமிழாய்வுகளை ஊக்குவித்தமை.

- நூலாக்கப்பணிகள்
    - திருவள்ளுவர்
    - ஒன்றே உலகம்
    - தமிழ்த்தூது
    - உலக ஒழுக்கவியலில் திருக்குறள்
    - Landscape and Poetry
    - Educational Thought in Ancient Tamil Society முதலியன

- **[12 + 08 + 05 = 25 புள்ளிகள்]**

## பகுதி II

4. (அ) சோழர் காலத்தில் எழுந்த இலக்கியங்களை வகைப்படுத்துக.

(ஆ) தமிழ் இலக்கிய வரலாற்றில் சோழர் காலம் காப்பிய காலம் எனச் சிறப்பிக்கப்படுவதற்கு ஏதுவாய் அமைந்த இலக்கியங்கள் பற்றிக் கருத்துரை வழங்குக.

(இ) உலாப் பிரபந்தத்தின் அமைப்பினையும் சோழப் பெருமன்னர் காலத்தில் அதுபெற்ற வளர்ச்சியினையும் எடுத்துக்காட்டி விளக்குக.

(15 புள்ளிகள்)

(அ)

- பெருங்காப்பியங்கள் / பேரிலக்கியங்கள்
  - சீவகசிந்தாமணி
  - வளையாபதி
  - குண்டலகேசி
  - கம்பராமாயணம்
- சிறுகாப்பியங்கள்
  - நீலகேசி
  - உதயணகுமாரகாவியம்
  - யசோதரகாவியம்
  - நாககுமாரகாவியம்
  - சூளாமணி

புராணம்

- பெரியபுராணம்

- சிற்றிலக்கியங்கள்
  - பரணி - கலிங்கத்துப்பரணி, தக்கயாகப்பரணி
  - உலா - மூவருலா
  - பிள்ளைத்தமிழ் - குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ்
  - மெய்க்கீர்த்தி
  - நளவெண்பா

**(05 புள்ளிகள்)**

(ஆ)

- தமிழ் இலக்கிய சரிதத்தில் பெருமளவு காப்பியங்கள் தோன்றியுள்ள காலப்பகுதியாக அமைதல்
- சீவகசிந்தாமணி
    - திருத்தக்கதேவரால் இயற்றப்பட்டது
    - சமண காப்பியம்
    - விருத்தப்பாவால் அமைந்துள்ளது.
    - சீவகனைத் தன்னிகரில்லாத் தலைவனாகக் கொண்டமைந்துள்ளது.

- வளையாபதி
    - ஆசிரியர் பெயர் அறியுமாறில்லை.
    - சமண காப்பியம்
    - விருத்தப்பாவால் அமைந்துள்ளது.
- குண்டலகேசி
    - நாதகுத்தனாரால் இயற்றப்பட்டுள்ளது.
    - பௌத்த காப்பியம்
    - விருத்தப்பாவால் அமைந்துள்ளது.
- சிறுகாப்பியங்கள்
- கம்பராமாயணம்

    - வடமொழியில் வால்மீகியால் எழுதப்பட்ட இராமாயணத்தைத் தழுவி கம்பரால் எழுதப்பட்டது.
    - கவிச்சக்கரவர்த்தி கம்பன், கல்வியிற் பெரியன் எனப் போற்றப்படுதல்.
    - ஆறு காண்டங்களைக் கொண்டுள்ளது.
    - விருத்தப்பாவால் அமைந்துள்ளது.
- பெரியபுராணம்
    - சேக்கிழாரால் இயற்றப்பட்டுள்ளது.
    - காப்பியச் சாயலைக் கொண்டுள்ளது.
    - இறைதொண்டு செய்து முக்தி அடைந்த சைவ அடியார்கள் 63 பேரைப்பற்றிய வரலாறு விரிவாகப் பேசப்பட்டுள்ளது.
    - விருத்தப்பாவால் அமைந்துள்ளது.

**(05 புள்ளிகள்)**

(இ)

- தலைவன் வீதியுலா வர, ஏழு பருவ மகளிரும் அவனைக் கண்டு காதல் கொள்வதாகக் கூறுவது உலா என்னும் சிற்றிலக்கியமாகும்.
    - விக்கிரம சோழன் உலா, குலோத்துங்க சோழன் உலா, இராசராச சோழன் உலா ஆகியவற்றின் தொகுதி மூவருலா எனப்பட்டது.
    - மூவருலா ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்டுள்ளது.

**(05 புள்ளிகள்)**

**[05 × 03 = 15 புள்ளிகள்]**

**5.** (அ) விஜய நகர நாயக்கர் கால அரசியல் நிலையினையும் இலக்கியப் பண்புகளையும் தெளிவுறுத்துக.
(ஆ) அக்காலத்தெழுந்த பொதுமக்கள் சார்பான இலக்கியங்களின் பொதுப் பண்புகளை விளக்குக.
(இ) அருணகிரிநாதரின் கவியாற்றலை மதிப்பிடுக.

(15 புள்ளிகள்)

(அ)

- அரசியல் நிலை
    - சோழ மன்னர்களின் ஆட்சி குன்ற பாண்டியரின் ஆதிக்கம் தலையெடுத்தல்.
    - வலிமை வாய்ந்த ஒரு மத்திய அரசு இல்லாமை.
    - தமிழரசின் ஆதிக்கம் முடிவடைய பதின்நான்காம் நூற்றாண்டில் தமிழகம் இஸ்லாமியர் ஆட்சிக்குட்படுதல்.
    - இஸ்லாமிய அரசு இஸ்லாம் சமயத்தைத் தென்னாடுகளிலும் பரப்ப முனைதல்.
    - இஸ்லாமியரின் படையெடுப்பால் இந்துசமயம் அழியும் எனக் கருதிய விஜயநகர மன்னர்கள் அவர்களை எதிர்த்து விஜயநகர அரசு என்ற இந்து அரசை உருவாக்குதல்.
- இலக்கியப் பண்பு
    - சமயச்சார்பு, தத்துவச்சார்பு, பழமை போற்றும் பண்பு.
    - ஆலய வரலாறு, இறைவனின் அருட்செயல்கள் என்பவற்றை எடுத்துக்கூறும் தலபுராண மரபு.
    - வசைக்கவி, சிலேடை முதலிய கவிதை வடிவங்களின் செல்வாக்கு.
    - இலக்கிய, இலக்கணங்களுக்கு உரையெழுதும் மரபு.

    சந்தக்கவி)
    - இலக்கியத்தில் பொதுமக்கட்சார்புத்தன்மை.
    - வடமொழிச் செல்வாக்கு.
    - மணிப்பிரவாள நடை

**(05 புள்ளிகள்)**

(ஆ) இலக்கியங்கள்

- முக்கூடற்பள்ளு, திருக்குற்றாலக் குறவஞ்சி, நொண்டி நாடகம்
- அடிநிலை மக்கள் பாட்டுடைத் தலைவர்களாதல்.
- நாடகப் பாங்கில் அமைதல்
- இசைப்பாங்கு
- நகைச்சுவை, காமச்சுவை இழையோடுதல்
- எளிமையான மொழிப் பிரயோகம்
- சமயச்சார்பு

**(05 புள்ளிகள்)**

(இ)

- திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, வேல்விருத்தம், மயில் விருத்தம் முதலிய பக்தியிலக்கியங்களின் ஆசிரியர்.
- சந்த நலமும் ஓசைச் சிறப்பும் உடைய பாடல்கள் பல பாடியவர்.
- ''வாக்கிற்கு அருணகிரி'' எனப் பிற்காலக் கவிஞர்களால் பாராட்டப்பட்டவர்.
- ''உனைப் போல் மெய்யாக ஓர் சொல் விளம்பினர் யார்'' எனத் தாயுமானவாரால் பாராட்டப்பெற்றவர்.

**(05 புள்ளிகள்)**

**[05 × 03 = 15 புள்ளிகள்]**

**6.** (அ) ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திற்கு முன்பு இலங்கையில் தமிழ்மொழியும் இலக்கியமும் வழங்கியமைக்கான சான்றுகளை ஆராய்க.

(ஆ) போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த சைவசமய நூல்கள் பற்றி விளக்குக.

(இ) சரசோதிமாலை பற்றிக் கருத்துரை வழங்குக.

(15 புள்ளிகள்)

**(அ)**

- சங்க இலக்கியத்தில் ஈழத்துப் பூதந்தேவனார் இயற்றிய பாடல்கள்.
- பட்டினப்பாலை முதலானவற்றில் வரும் ஈழம் பற்றிய குறிப்புகள்.
- திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் முதலான தலங்கள் பற்றிய சம்பந்தர், சுந்தரரின் பதிகங்கள்.
- அநுராதபுரம் (கோட்டக), பொலனறுவை (சோழர்களது கல்வெட்டுக்கள்), பண்டுவஸ்நுவர முதலான இடங்களில் கண்டெடுக்கப்பட்ட தமிழ்ச் சாசனங்கள்.
- வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் கிடைத்த தமிழ்ப் பிராமி எழுத்துப் பொறிப்புகள்.
- சிங்கள, பாளி நூல்களில் காணப்படும் தமிழர்கள் பற்றிய குறிப்புகள்.
- மொழிவழக்கில் நிலைத்துள்ள தனித்துவப் பண்புகள்.

**(05 புள்ளிகள்)**

**(ஆ)**

| | |
|---|---|
| - ஏகாதசிப் புராணம் | வரதபண்டிதர் |
| - சிவராத்திரி புராணம் | வரதபண்டிதர் |
| - பிள்ளையார் கதை | வரதபண்டிதர் |
| - பஞ்சவன்னத்தூது | இணுவில் சின்னத்தம்பிப் புலவர் |
| - புலியூரந்தாதி | மாதகல் மயில்வாகனப் புலவர் |
| - வெருகல் சித்திரவேலாயுதர் காதல் | வீரக்கோன் முதலியார் |
| - பறாளை விநாயகர் பள்ளு | நல்லூர் சின்னத்தம்பிப்புலவர் |
| - மறைசை அந்தாதி | நல்லூர் சின்னத்தம்பிப்புலவர் |
| - கல்வளை அந்தாதி | நல்லூர் சின்னத்தம்பிப்புலவர் |

**(05 புள்ளிகள்)**

**(இ)**

- ஈழத்தில் எழுந்த தமிழ் நூல்களுள் காலத்தால் முந்தியது.
- தம்பதெனியாவில் நான்காம் பராக்கிரமபாகுவின் அவைக்களத்தில் அரங்கேற்றப்பட்டது.
- 12 படலங்களையும் 934 விருத்தப்பாக்களையும் கொண்டுள்ளது.

**(05 புள்ளிகள்)**

**[05 × 03 = 15 புள்ளிகள்]**

7. பின்வருவோரில் யாரேனும் **இருவர்** ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெறும் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.
   (அ) முகம்மது காசிம் சித்திலெப்பை
   (ஆ) நவாலியூர் சோமசுந்தரப் புலவர்
   (இ) இலங்கையர்கோன்
   (ஈ) செ. கணேசலிங்கன் (15 புள்ளிகள்)

**அ) முகம்மது காசிம் சித்திலெப்பை**

- கண்டியில் பிறந்தவர் (1838 - 1898).
- தமிழ், ஆங்கிலம், அரபு, சிங்களம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றவர்.
- சட்டத்தரணியாக விளங்கியவர்.
- பத்திரிகையாசிரியர் : முஸ்லிம்நேசன், ஞானதீபம்
- நாவல் : அசன்பேயின் கதை / அசன்பேயின் சரித்திரம்
- பிறநூல்கள் : அபுநவாஸின் கதை, இலங்கைச் சோனகர் சரித்திரம், அஸ்ரானுல் ஆலம் முதலான நூல்கள்
- கட்டுரைகள் : சமயம், வரலாறு, பண்பாடு தொடர்பாக பல கட்டுரைகள்.

**ஆ) நவாலியூர் சோமசுந்தரப் புலவர்**

- இருபதாம் நுற்றாண்டில் வாழ்ந்த ஈழத்துப் புலவர் (1878 - 1953)
- சமயச் சார்புடைய பிரபந்தங்கள்.
  - அட்டகிரி முருகன் திருவூஞ்சல்
  - கதிரைச் சிலேடை வெண்பா
  - நல்லையந்தாதி
- தேசிய, சமூக உணர்வை வெளிப்படுத்தும் பாடல்கள்.
  - தால விலாசம்
- சிறுவர்களுக்கான பாடல்கள்.
  - சிறுவர் செந்தமிழ்
- கதைப்பாடல்கள்
  - பவளக்கொடி
- நாடக இலக்கியங்கள்
  - உயிரிளங்குமரன்

**இ) இலங்கையர்கோன்**

- அறிமுகம்
  - இயற்பெயர் : சிவஞானசுந்தரம் (1915 - 1961)
  - இடம் : ஏழாலை
- ஈடுபட்ட துறைகள்
  - சிறுகதை, நாடகம், மொழிபெயர்ப்பு, கட்டுரை
- சிறுகதை
  - வெள்ளிப்பாதசரம்
- நாடகம்
  - விதானையார் வீட்டில்
  - லண்டன் கந்தையா
  - மாதவி மடந்தை
  - மிஸ்டர் குகதாசன்
- மொழிபெயர்ப்பு
  - முதற்காதல்

**ஈ) செ.கணேசலிங்கன்**

- அறிமுகம்
  - இடம் : உரும்பிராய் (1928 - 2021)
- ஈடுபட்ட துறைகள்
  - சிறுகதை, நாவல், விமர்சனம், கடித இலக்கியம், சிறுவர் இலக்கியம், சஞ்சிகை வெளியீடு
- சிறுகதை
  - கொடுமைகள் தாமே அழிவதில்லை
  - ஊமைகள்
  - ஒரே இனம்
- நாவல்
  - நீண்ட பயணம்
  - செவ்வானம்
  - போர்க்கோலம்
  - சடங்கு
- சஞ்சிகை வெளியீடு (குமரன்)

**[07 1/2 + 07 1/2 = 15 புள்ளிகள்]**

8. (அ) (i) வா என்ற வினையடியாகப் பிறக்கும் ஆக்கப்பெயர், தொழிற்பெயர், வினையாலணையும் பெயர் என்பவற்றுக்கு ஒவ்வொரு உதாரணம் தருக.

(ii) நவீனத் தமிழ், நவீனக் கவிதை இத்தொடர்களில் வல்லினம் மிகுவது அவசியமா என்பது பற்றி கருத்துரை வழங்குக.

(iii) சந்திரனின் தங்கை குடும்பமும் ஆனந்தியின் அண்ணர் குடும்பமும் அவர்களுடனேயே தங்கிவிட்டனர். இவ்வாக்கியத்திலுள்ள வழுவைச் சுட்டிக்காட்டி அதனை வழுவற்ற வகையில் எழுதுக.

(iv) பின்வரும் சொற்களை அவற்றில் இடம்பெற்றுள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி சரியான முறையிலே எழுதுக.

- திறப்புக்கோர்வை
- இளங்கலைமானி

(v) நாம் நமது கலாசாரம், பண்பாடு ஆகியவற்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். இவ்வாக்கியத்தில் கலாசாரம், பண்பாடு என்ற சொற்பயன்பாட்டின் பொருத்தப்பாடு பற்றிக் கருத்துரை வழங்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்றினைப் பற்றி** சிறுகுறிப்பு வரைக.

(i) அகப்புணர்ச்சியும் புறப்புணர்ச்சியும்

(ii) ஆக்கப்பெயர்

(iii) ஏவல்வினை

(05 புள்ளிகள்)

(10 + 05 = 15 புள்ளிகள்)

(அ).

(i)

- ஆக்கப் பெயர் - வருகை, வரவு
- தொழிற் பெயர் - வருதல், வருவது, வந்தமை…..
- வினையாலணையும் பெயர் - வந்தவன், வந்தவள்,…

(ii) வல்லினம் மிகுவது அவசியம் இல்லை. நவீன என்பது பெயரடை. அகர ஈற்றுப் பெயரெச்சம், பெயரடை என்பன வல்லினத்தின் முன் இயல்பாகப் புணர்வதே வழக்கு (தற்காலத்தில் சிலர் இங்கு வல்லினம் மிகாமல் எழுதுவது பிழை என்ற எண்ணத்தில் இப்படி எழுதுகிறார்கள்).

(iii) குடும்பம் என்பது அ∴றிணைப்பெயர். தங்கிவிட்டனர் என்பது உயர்திணை வினைமுற்று. இவ்வாக்கியத்தில் திணைவழு உள்ளது. இவ்வாக்கியத்தில் குடும்பம் என்பதை குடும்பத்தினர்

ம்

அவர்களுடனேயே தங்கிவிட்டனர்.

- சந்திரனின் தங்கை குடும்பமும் ஆனந்தியின் அண்ணர் குடும்பமும் அவர்களுடனேயே தங்கிவிட்டன.

(iv) திறப்புக்கோவை

இளங்கலைமாணி

(v) கலாசாரம், பண்பாடு இரண்டும் ஒருபொருட் சொற்கள்.

கலாசாரம் என்பது வடசொல்.

பண்பாடு என்பது தமிழ்ச்சொல்.

இரண்டும் வேறு வேறு பொருள் உடையவை என்று நினைத்துக்கொண்டு சிலர் இவ்வாறு எழுதுகின்றனர். அவ்வாறு எழுதுவது பொருத்தமற்றது.

**(02 × 05 = 10 புள்ளிகள்)**

ஆ.

(i) அகப்புணர்ச்சியும் புறப்புணர்ச்சியும்

அகப்புணர்ச்சி :

- ஒரு சொல்லின் அமைப்புக்குள் - பகுபத உறுப்புக்கள் - ஒன்றுடன் ஒன்று புணர்வது அகப்புணர்ச்சி எனப்படும்.

உ-ம்: மரங்கள், மரத்தை, மரத்திலிருந்து.

வந்தேன், வருவேன், வந்துகொண்டிருந்தேன்.

புறப்புணர்ச்சி :

- இரண்டு அல்லது பல சொற்கள் அடுத்தடுத்து வந்து புணர்வது புறப்புணர்ச்சி எனப்படும்.

உ-ம்: கோயில்மணி

கதவுடைந்தது

(ii) ஆக்கப்பெயர்.

ஒரு அடிச்சொல்லுடன் ஆக்கப்பெயர் விகுதி சேர்ந்து ஆக்கப்படும் பெயர்

ஆக்கப்பெயர் எனப்படும்.

அடிச்சொல் பெயர்ச்சொல்லாக, வினைச்சொல்லாக அல்லது இடைச்சொல்லாக

உ-ம்: முதலாளி, தொழிலாளி, பொருளியல், பெண்ணியம் …..

சிரிப்பு, புளிப்பு, நடை, கேள்வி, தோல்வி ….

சிறியோர், முன்னோர் ….



Past Papers Wiki - Download More Past Papers and Study Well!

(iii) ஏவல்வினை

- முன் நிற்பவரை ஒரு வினையைப் புரியுமாறு அல்லது புரியாது இருக்குமாறு பணிப்பதற்குப் பயன்படும் வினை ஏவல் வினை எனப்படும். ஏவல்வினைகளை உடன்பாட்டு ஏவல், எதிர்மறை ஏவல் என்றும் ஏவல் ஒருமை, ஏவல் பன்மை என்றும் மரியாதை ஏவல், அல் - மரியாதை ஏவல் என்றும் கடப்பாட்டு ஏவல், விருப்பு ஏவல் என்றும் பலவாறு வகைப்படுத்தலாம்.
- ஒவ்வொன்றுக்கும் உதாரணம் தந்து விளக்கலாம்.

**(05 புள்ளிகள்)**

[**10 + 05 = 15 புள்ளிகள்**]

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WIKI



Past Papers Wiki - Download More Past Papers and Study Well!